## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஜீன் மாதம் 26–ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண்.44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **ராமர்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**26.06.2025 OS.No. 57/2021 பி.வா.சா. 1 ஆஜர்**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கின் பிரதிவாதியின் அதிகார முகவர் ஆவேன். எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து பின்பு அதில் நான் கையொப்பம் செய்தேன் . பிரமான வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

04.02.1999 ம் தேதி 1 ம் பிரதிவாதி தாவா சொத்தை மாரிமுத்துவிடம் கிரையம் பெற்ற ஆவணம் அசல் **<u>பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** 28.10.1998 ம் தேதி வாதிகள் மற்றும் அவர்களது தந்தையும் விஜயராமனுக்கு கிரையம் கொடுத்த ஆவணம் அசல் **<u>பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**. 27.07.2020 ம் தேதி சர்வே எண் .57/1A2 வருவாய் துறையினர் வழங்கிய பட்டா எண் .1117 மற்றும் பட்டா மாறுதல் உத்தரவு கணினி பதிவிறக்க நகல் **<u>பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** 15.04.2021 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **<u>பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** 19.08.2015 ம் தேதி சர்வே எண் .5/2 க்குரிய வில்லங்க சான்று பதிவிறக்க நகல் **<u>பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>**

**<u>குறுக்கு விசராணை</u>**

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam